# ‘மாநில சுயாட்சி’ - இன்று ஏன் அவசர அவசியம்?

## ‘தினத்தந்தி’ நாளிதழில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புக் கட்டுரை!

**‘மாநில சுயாட்சி’ இன்று ஏன் அவசர அவசியம்? என்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விளக்கியுள்ளார்.**

**மாநில சுயாட்சியின் அவசியம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விளக்கமாக ‘தினத்தந்தி’க்கு அளித்த கட்டுரையில் கூறியிருப்பதாவது:-**



**ஒன்றியத்தில் - மாநிலங்களின் உரிமைகளைச் சிதைக்கப் பார்க்கும் அரசு இன்று!**

இந்திய நாட்டை ‘மாநிலங்களின் ஒன்றியம்’ என்றுதான் இந்திய அரசமைப்புச் சட்டம் வரையறுக்கிறது. மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி என்பது தி.மு.க.வின் அடிப்படைக் கொள்கையாகும். அந்த முழக்கத்தை வென்றெடுக்க நீதிபதி ராஜமன்னார் தலைமையில் மூவர் குழுவை தலைவர் கலைஞர் அமைத்தார். அதே இலக்கில்தான் நீதிபதி குரியன் ஜோசப்பை தலைவராகவும், அசோக்வர்தன் ஷெட்டி, பேராசிரியர் நாகநாதன் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழுவை அமைத்துள்ளோம்.

கலைஞர் குரல் எழுப்பிய காலத்தைவிட இன்றைய காலம் மிகமிக மோசமான காலமாகும். அன்றைய காலக்கட்டத்தில் ஒரு சில அதிகாரங்கள்தான் பறிக்கப்பட்டன. ஆனால் இன்றைய மத்திய பா.ஜனதா ஆட்சியானது, மாநில அரசுகளை முடக்கப்பார்க்கிறது; மாநிலங்களின் மொழி, கலாச்சாரங்களை அழிக்கப்பார்க்கிறது; மாநிலங்களின் உரிமைகளைச் சிதைக்கப்பார்க்கிறது. மாநில அரசுகளை அதிகாரமற்றவைகளாக மாற்றி, அதனை ‘சட்டமியற்றும்’ தகுதியற்றவைகளாகத் தகுதியைக் குறைத்து, ‘சொன்னதைச் செய்யும்’ கிளிப் பிள்ளைகளாக மாற்ற நினைக்கிறது மத்திய பா.ஜனதா அரசு.

**மாநில அரசுகள் பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிற்கும் காட்சிகள்!**

முதலில் நிதி உரிமையைப்பறிக்கும் வகையில் வரி உரிமைகளைப் பறித்தார்கள். இழப்பீடு தருவதாக நடித்தார்கள். அந்த இழப்பீட்டையும் சில காலத்தில் நிறுத்தினார்கள். இப்போது, பல மாநில அரசுகள், மத்திய அரசை நோக்கி பிச்சைப்பாத்திரம் ஏந்திநிற்கும் காட்சியைத்தான் பார்க்கிறோம். ஒரு மாநிலத்துக்கு நிதி உரிமையே உயிர்க் காற்றாக (ஆக்சிஜனாக) இருக்கிறது. இதனைப் பறிப்பது, மூச்சற்ற நிலையை உருவாக்குவதே ஆகும்.

இந்திய அரசமைப்புச் சட்டமானது, ஒத்திசைவுப்பட்டியல், ஒன்றியப்பட்டியல், மாநிலப்பட்டியல் என அதிகார எல்லைகளை வகுத்திருக்கிறது. கடந்த பத்தாண்டுகளாக ஒத்திசைவுப்பட்டியல் அதிகாரங்கள் அனைத்தையும், மத்திய அரசின் அதிகாரங்களாக மாற்றிக்கொண்டுவிட்டார்கள். மாநிலப் பட்டியல் என்பதை மதிப்பதே இல்லை. அதில் இருக்கும் பொருள்கள் குறித்தும், அவர்களே சத்தமில்லாமல் சட்டம் இயற்றிக்கொள்கிறார்கள். சட்டம் இயற்றும் அதிகாரத்தை முடக்குவதன் மூலமாக மாநி லங்களின் கை, கால்களை அசைக்க முடியாத நிலையை உருவாக்கப் பார்க்கிறார்கள். மாநிலங்கள் தாம் நினைப்ப தைச் செய்யமுடியாத தடையை மத்திய பா.ஜனதா அரசு ஏற்படுத்துகிறது.

**ஏழைகளை கல்விச் சாலைகளில் இருந்து துரத்தும் கல்வி முறை!**

சமூகநீதி, பொருளாதார ஏற்றத்தாழ்வின்மை, ஒடுக்கப் பட்டோருக்கான வாய்ப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மாநில அரசின் கல்விக்கொள்கையை வகுத்திருக்கிறோம். அதனைச் சிதைக்க தேசியக்கல்விக் கொள்கையைக் கொண்டு வருகிறார்கள். இது ஏழை-எளிய மக்களை கல்விச்சாலைகளில் இருந்து துரத்தும் கல்வி முறையாகும்.

**இந்தி பேசாத மக்களை - இரண்டாம் தர மக்களாக மாற்றும் சூழ்ச்சி!**

‘நீட்’ தேர்வானது நமது ஏழை கிராமப்புற மாணவர்களின் மருத்துவக்கல்விக் கனவைச் சிதைப்பதாக இருக்கிறது. மும்மொழிக் கொள்கை என்ற போர்வையில் இந்தி மொழியை மத்திய அரசு மறைமுகமாகத் தமிழ்நாட்டு மாணவர்களின் மீது திணிக்க முற்படுகிறது. மும்மொழிக் கொள்கை என்று முதலில் சொல்லி, பின்னர் அதனை இந்தி மொழிக்கொள்கையாகவே மாற்றிவிடுவார்கள். இது இந்தி பேசாத மக்களை இந்திய நாட்டில் இரண்டாம் தர மக்களாக மாற்றும் சூழ்ச்சியாகும்.

இதை ஏற்க மறுத்ததால் 42 லட்சம் மாணவர்களின் நலனைப் பற்றிக் கவலைப்படாமல், தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய 2,500 கோடி ரூபாயைத் தராமல் மறுக்கிறது மத்திய அரசு. அந்தளவுக்கு இரக்கமற்று இருக்கிறது மத்திய பா.ஜனதா அரசு.

மத்திய நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மாநிலங்களுக்குப் பகிரப்படும் நிதியானது, தமிழ்நாடு போன்ற பொருளாதாரத்தில் முன்னேறியுள்ள மாநிலங்க ளின் பங்களிப்பிற்கு ஈடாகத்தரப்படுவது இல்லை. நாம் பங்களிக்கக்கூடிய ஒரு ரூபாய் வரியில் 29 பைசா மட்டுமே நமக்கு நிதிப்பகிர்வாக அளிக்கப்படுகின்றது.

**தமிழ்நாட்டு எம்.பி.க்கள் எண்ணிக்கையைக் குறைக்க சதி!**

இயற்கைச் சீற்றங்களினால் தமிழ்நாடு பாதிக்கப்பட்ட போதெல்லாம் கூட, உரிய இழப்பீடுகள், தகுந்த ஆய்வு மற்றும் அளவீடுகள் செய்த பின்னரும், பல முறை வலியுறுத்தியும், வழங்கப்படவே இல்லை. இதன் உச்சகட்டமாகத் தமிழ்நாட்டு எம்.பி.க்களின் எண்ணிக்கையைக் குறைக்கச் சதி செய்கிறார்கள்.

நமக்கு இடைஞ்சல் ஏற்படுத்தவும், எரிச்சல் ஏற்ப டுத்தவுமே கவர்னர்கள் அனுப்பி வைக்கப்படுகிறார் கள். இன்றைய கவர்னர் வந்தது முதல் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் குழிதோண்டிக் கொண்டிருக்கிறார். நாம் இயற்றிய சட்டமசோதாக்கள் மீது உரிய ஒப்புதல் வழங்காமல் காலம்தாழ்த்தி வந்தார். அவரது செயலை ‘சட்ட விரோதம் என்று உச்சநீதிமன்றமே தீர்ப்பளித்த பிறகும் அவர் திருந்தவில்லை; திருந்த மாட்டார்; அவரது குணத்தை எந்தத் தீர்ப்பும் மாற்ற முடியாது. கவர்னர் பதவியே தேவையில்லை என்பதுதான் நிரந்தரத்தீர்வாக அமையும்.

**வளர்ச்சியான மாநிலங்களே வலிமையான இந்தியா!**

எதேச்சதிகார மத்திய அரசு முதல், எரிச்சல் ஏற்படுத்தும் கவர்னர்கள் வரை அனைவரும் மாநிலத்துக்கு எதிரிகளாக இருக்கிறார்கள். எனவே மாநில அமைப்பைக் காப்பதே மாநில மக்களைக் காப்பதாகும் என்பதால்தான் ‘மாநில சுயாட்சி’ முழக்கத்தை தி.மு.க. ஓங்கி ஒலிக்கிறது. இவை ஏதோ இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், இறையாண்மைக்கும் அச்சுறுத்தல்போல சிலர் பயமுறுத்துகிறார்கள்.

மத்தியில் கூட்டாட்சியை ஒப்புக்கொண்ட நிலையில், இந்திய அரசியல் சட்ட அமைப்பிற்கு உட்பட்டுத்தான் மாநிலங்களுக்குச் சுயாட்சி கேட்கப்படுகிறது என்பதை இவர்கள் வேண்டுமென்றே மறைக்கிறார்கள். கூட்டாட்சி கொண்ட இந்தியா வலிமைபெற வேண்டுமானால் மாநிலங்கள் தாங்கள் விரும்பிய வண்ணம் ஆட்சி செலுத்தி வளர்ச்சியை அடைந்தாகவேண்டும். வளர்ச்சியான மாநிலங்களே, வலிமையான இந்தியாவை உருவாக்கும்.

**மாநில சுயாட்சிக்காக அனைவரும் முழங்குவோம்!**

நாம் எந்தப் பிரிவினை எண்ணத்தோடும் மாநில சுயாட்சிக் குழுவை அமைக்கவில்லை. மத்திய அரசின் சார்பில் 1983ஆம் ஆண்டில் சர்க்காரியா ஆணையம், 2007-ம் ஆண்டில் நீதிபதி பூஞ்சி ஆணையம் ஆகியவை அமைக்கப்பட்டது. எனவே மாநில சுயாட்சி என்பது மத்திய ஆட்சியாளர்களா லும் பல்வேறு காலக்கட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட உன்னதமான கருத்தேயாகும். எனவே யாரும் தேவையற்ற பீதியைக் கிளப்பத் தேவையில்லை.

இந்தியா வலிமைபெற, வேற்றுமையில் ஒற்றுமை காணவே மாநில சுயாட்சி அவசியமாகும். விடுதலை பெற்ற இந்தியாவில் மொழிவாரி மாகாணங்கள், மக்களது உணர்வுகளை மதித்தது போல, ’மாநில சுயாட்சி’யை நிறைவேற்றினாலும் மக்கள் மனமகிழ்ச்சியை அடைவார்கள் என்பதுதான் முழுமுதல் உண்மையா கும். எனவே, மாநில சுயாட்சிக்காக அனைவரும் முழங்குவோம்.வளமும், வளர்ச்சியும் பெற்ற மாநிலங்களின் மூலமாக கூட்டாட்சி இந்தியாவை உருவாக்குவோம்.

இவ்வாறு அக்கட்டுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

---

# எதிரிகளின் சக்கர வியூகத்தில் சிக்குகின்ற அபிமன்யு அல்ல எங்கள் முதல்வர்!

# விரல் சக்கரத்தால் வியூகங்களை உடைக்கும் கிருஷ்ண பரமாத்மாவைப் போன்றவர்!

## பேரவையில் – மானியக் கோரிக்கைக்கான பதிலுரையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணர்ச்சிப் பெருக்குடன் உரை!

சென்னை, ஏப். 18-

“எதிரிகளின் சக்கர வியூகத்தில் சிக்குகின்ற அபிமன்யு அல்ல எங்கள் முதல்வர்! விரல் சக்கரத்தால் வியூகங்களை உடைக்கும் கிருஷ்ண பரமாத்மாவைப் போன்றவர் எங்கள் முதல்வர் அவர்கள்” என்று சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தமது மானியக் கோரிக்கைக்கான பதிலுரையில் உரையாற்றும்போது கூறினார்.

நிறைவாக ஒருசில கருத்துகளோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

ஆயிரக்கணக்கான ஆலயங்களின் கோபுர கலசங்கள் அனைத்தும் திராவிடச் சூரியனால் ஒளிபட்டு மின்னுகின்றன. அதனால் ஆண்டவனின் ஆதரவோ எங்கள் முதல்வருக்குத் தான் என்று சொல்லுகின்றன.

**கம்பர் இருந்திருந்தால் திராவிட காவியம் செய்திருப்பார்!**

எங்கள் முதல்வரின் பொற்கால ஆட்சியைப் பற்றி கம்பர் இருந்திருந்தால், திராவிட காவியம் செய்திருப்பார்; வள்ளுவர் இருந்திருந்தால், புதுக்குறள் புனைந்திருப்பார்; இளங்கோ இருந்திருந்தால், சமூக நீதி காப்பியம் வடித்திருப்பார்; பாரதியார் இருந்திருந்தால், புதுக்கவிதை ஆயிரம் பாடியிருப்பார்; பாரதிதாசன் இருந்திருந்தால், கொள்கை விளக்கு இயற்றியிருப்பார்; பெரியார், அண்ணா, கலைஞர் இருந்திருந்தால், கைதட்டி ஆரவாரம் செய்திருப்பார்கள்.

அறநிலையத் துறை வரலாற்றில் ஒரு முதல்வர் அதன் தலைமை நிலையத்திற்கு-முதன்முதலில் அறநிலையத் துறை 1959 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிறகு, நான்கு முறை அறநிலையத் துறை அலுவலகத்திற்கு காலடி வைத்த பெருமை எங்கள் முதல்வர் அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல, ஒரு முறையா, இருமுறையா என்பது மாத்திரமல்ல...

**100 நிகழ்ச்சிகளில் பங்கேற்ற முதல்வர்!**

அறநிலையத் துறையின் 74 ஆண்டுகால வரலாற்றில் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? இதுவரையில் 100 நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சதமடித்த ஒரே முதல்வர் தமிழக முதல்வர் ஒருவராகத்தான் இருக்கமுடியும். அந்த 100 நிகழ்ச்சிகளையும் புத்தகமாக வழங்கியிருக்கின்றோம்.

**முதல்வரின் காலம் நூற்றாண்டுகளின் காலம்!**

100 என்பது எங்கள் முதல்வரின் வாழ்க்கையில் பின்னிப்பிணைந்த ஒன்று. ஆம், அவர் காலம் நூற்றாண்டுகளின் காலம். ஆம், அவர் காலம் நூற்றாண்டுகளின் காலம். முத்தமிழறிஞர் கலைஞருக்கு நூற்றாண்டு விழா; இனமான பேராசிரியர் பெருந்தகைக்கு நூற்றாண்டு விழா; நடமாடும் பல்கலைக்கழக நாவலருக்கு நூற்றாண்டு விழா; வாலிப பெரியார் ஏ.வி.பி. ஆசைத்தம்பிக்கு நூற்றாண்டு விழா; தோழர்களின் இரும்பு மனிதர் சங்கரய்யா வாழும் காலத்திலேயே அவருக்கு நூற்றாண்டு விழா; வாழும் விடுதலைப் போராட்ட வீரர் தோழர் நல்லகண்ணுக்கு நூற்றாண்டு விழா; வைக்கம் போராட்டத்தின் சமூக நீதிக்கு நூற்றாண்டு விழா. இப்படி பல நூற்றாண்டுகளை தன்வசமாக்கிக் கொண்ட எங்கள் முதல்வரின் சாதனைக்கு 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள தேர்தலிலும் மக்கள் நூற்றுக்குநூறு வெற்றியைத்தருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் நான் ஒன்றைப் பதிவு செய்கிறேன்.

**வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் நான் ஒன்றைப் பதிவு செய்கிறேன். 2026 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு, கூடுகின்ற சட்டமன்றக் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறையினுடைய மானியக் கோரிக்கையை, நிச்சயமிட்டுச் சொல்கிறேன், நம் திராவிட மாடல் முதல்வர் தலைமையிலே அமைந்திருக்கின்ற இந்த ஆட்சியில் இருக்கின்ற ஓர் அமைச்சர்தான் இந்து சமய அறநிலையத் துறையினுடைய மானியக் கோரிக்கையை 2026 ஆம் ஆண்டு வாசிப்பார் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)**



எதிரிகளின் சக்கர வியூகத்தில் சிக்குகின்ற அபிமன்யு அல்ல எங்கள் முதல்வர். எதிரிகளின் சக்கர வியூகத்தில் சிக்குகின்ற அபிமன்யு அல்ல எங்கள் முதல்வர். விரல் சக்கரத்தால் வியூகங்களை உடைக்கும் கிருஷ்ண பரமாத்மாவை போன்றவர் எங்கள் முதல்வர். விரல் சக்கரத்தால் வியூகங்களை உடைக்கும் கிருஷ்ண பரமாத்மாவை போன்றவர் எங்கள் முதல்வர்.

**“நான் என்ன ஆயுதம் எடுக்க வேண்டும்**

**என்பதை என் எதிரிதான் தீர்மானிக்கிறான்”**

**என்றார் புரட்சியாளர் மாவோ.**

**“நான் என்ன ஆயுதம் எடுக்க வேண்டும்**

**என்பதை என் எதிரிதான் தீர்மானிக்கிறான்”**

**என்றார் புரட்சியாளர் மாவோ.**

எங்கள் முதல்வர் கையில் உயர்த்திப் பிடிப்பது சமூக நீதி என்னும் வேலாயுதம்; எங்கள் முதல்வர் கையில் உயர்த்திப் பிடிப்பது சம நீதி என்னும் சூலாயுதம்; எங்கள் முதல்வர் கையில் உயர்த்திப் பிடிப்பது சமத்துவம் என்னும் பேராயுதம்; எல்லோர்க்கும் எல்லாம் என்னும் சக்ராயுதம்; தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும் என்னும் முழக்கமே எங்கள் முதல்வரின் போர் ஆயுதம்; எங்கள் முதல்வரின் போர் ஆயுதம்; (மேசையைத் தட்டும் ஒலி) இத்தனை ஆயுதங்களோடு எங்கள் முதல்வரின் சமூக நீதிப் போராட்டம் வெல்லும்! வெல்லும்! வெல்லும்! (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆட்சி அறநிலையத் துறைக்கு என்ன செய்தது என்று பலர் கேட்கிறார்கள். கேட்பவர்களுக்கு சொல்கிறேன். இந்த ஆட்சியில்தான் அரசு நிதியாக இதுவரை இல்லாத அளவிற்கு 1,006 கோடி ரூபாயை அரசின் சார்பில் வாரி வழங்கிய வள்ளல் எங்கள் முதல்வர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்ன கொடுப்பான், ஏது கொடுப்பான், என்ன கொடுப்பான், எவை கொடுப்பான் என்று இவர்கள் எண்ணு முன்னே பொன்னும் கொடுப்பான், பொருளும் கொடுப்பான் போதாது போதாதென்றால் இன்னும் கொடுப்பான், இவையும் குறைவென்றால் தன்னையும் கொடுப்பான், தயாபரனே-வாழும் கர்ணனாக இருப்பவரே எங்கள் முதல்வரே வாழிய நீவீர் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு என்று கூறிக் கொள்கிறேன்.

> ங்கள் முதல்வரின் பொற்கால ஆட்சியைப் பற்றி கம்பர் இருந்திருந்தால், திராவிட காவியம் செய்திருப்பார்; வள்ளுவர் இருந்திருந்தால், புதுக்குறள் புனைந்திருப்பார்; இளங்கோ இருந்திருந்தால், சமூக நீதி காப்பியம் வடித்திருப்பார்; பாரதியார் இருந்திருந்தால், புதுக்கவிதை ஆயிரம் பாடியிருப்பார்; பாரதிதாசன் இருந்திருந்தால், கொள்கை விளக்கு இயற்றியிருப்பார்; பெரியார், அண்ணா, கலைஞர் இருந்திருந்தால், கைதட்டி ஆரவாரம் செய்திருப்பார்கள்.

என் உரையை நிறைவு செய்வதற்கு முன்னாள் இந்த உரையைத் தயாரிப்பதற்கு உதவியாக இருந்த தலைமைச் செயலாளர் என். முருகானந்தம், அவர்களுக்கும், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க. மணிவாசன் அவர்களுக்கும், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையர் பி.என். ஸ்ரீதர், அவர்களுக்கும், இந்தத் துறையை கடந்த காலங்களில் முன்னெடுத்த இத்துறையின் முன்னாள் முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், அவர்களுக்கும், இத்துறையின் முன்னாள் ஆணையர் ஜெ. குமரகுருபரன், அவர்களுக்கும், இத்துறையின் முன்னாள் ஆணையர் க.வீ. முரளீதரன் அவர்களுக்கும், இந்நாள் கூடுதல் ஆணையர் (நிர்வாகம்) மருத்துவர். சி. பழனி, அவர்களுக்கும், தலைமை பொறியாளர் பொ. பெரியசாமி அவர்களுக்கும், கூடுதல் ஆணையர் (விசாரணை) திருமதி. ந.திருமகள் அவர்களுக்கும், கூடுதல் ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்கள்) திருமதி எஸ். ஹரிப்ரியா அவர்களுக்கும், கூடுதல் ஆணையர் (பொது) திருமதி மா. கவிதா அவர்களுக்கும், கூடுதல் ஆணையர் (தலைமையிடம்) சி. லட்சுமணன் அவர்களுக்கும், கூடுதல் ஆணையர் (திருப்பணி) பொ. ஜெயராமன் அவர்கள் உட்பட அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்தத் துறையின்மீது நான் அளித்த பதில்களும், அறிவிப்புகளும், ஓரளவிற்கு உறுப்பினர்கள் நிறைவடைவார்கள் என்ற நம்பிக்கையோடு அஞ்சுவது யாதொன்றும் இல்லை;

அஞ்சுவது யாதொன்றும் இல்லை, இனி அஞ்சத் தேவையும் இல்லை என்ற போக்கோடு, நிமிர்ந்த நடையோடு, நேர்கொண்ட பார்வையோடு, எதிர்ப்பு எதுவரினும் அஞ்சாமல் தமிழகத்தைக் காக்கும் காவல் தெய்வம் எங்கள் தளபதியின் பின்னால் நிற்போம் உறுதியாக! நிற்போம் உறுதியாக! என்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர்கள் தாங்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

பசி வயிற்றைச் சூழ்ந்திருந்தாலும், திரளான சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் குறுக்கிட வேண்டுமென்பதற்காகக் குறுக்கிட்ட எதிர்க்கட்சியைச் சார்ந்த துணைத் தலைவர் உட்பட அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு உரையாற்றினார்.